

மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலில் முன்னிட்டு போட்டியிடும் கழக வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமனை ஆதரித்து அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றியம் தீட்டாளம் ஊராட்சியில் மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் வீதி வீதியாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார் இந்நிகழ்வில் மாவட்ட அவை தலைவர் மு. பகலவன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் கி.வேணு ஆனந்த, நா.பரிமளம், கொள்கை பரப்பு துணைச் செயலாளர் வெ.அன்புவாணன், பொதுக்குழு உறுப்பினர் மாதரபாக்கம் பா.செ.குணசேகரன், ஊராட்சி மன்ற தலைவர் ஜெகத்ரட்சகன் மற்றும் நிர்வாகிகள் பெருந்திரளாக உள்ளனர்.

### துப்புரவுத் தொழிலாளர்கள் போராட்டத்தின் மூலம் பெற்ற சம்பள உயர்வுக்கு

# முதல்வர் ரங்கசாமி சொந்தம் கொண்டாடுவது அரசியல் நாடகம்!

## திமுக மாநில அமைப்பாளர் இரா. சிவா குற்றச்சாட்டு !

புதுச்சேரி, அக். 4- புதுச்சேரி மாநில திமுக சார்பு துப்புரவுத் தொழிலாளர்கள் தங்களுக்கான குறைந்தபட்ச கூலி உயர்வை தொடர்ந்து போராடி பெற்றதை முதல்வர் ரங்கசாமி சொந்தம் கொண்டாடுவது அரசியல் உள்நோக்கம் கொண்டது என திமுக அமைப்பாளர் இரா. சிவா குற்றம்சாட்டி உள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: - காந்தி ஜெயந்தியை முன்னிட்டு கம்பன் கலையரங்கில் நடைபெற்ற அரசு விழாவில், துணை நிலை ஆளுநருடன் பங்கேற்ற முதல்வர் ரங்கசாமி துப்புரவுத் தொழிலாளர்களுக்கு நாள் கூலி ரூ. 424 ஆக உயர்த்தி வழங்கியைப்பற்றி பெருமை பேசி உள்ளார். இதில் அவருக்கு எந்த உரிமையோ, பங்கோ இல்லை. கடந்த ஆட்சியில் சட்டமன்றத்தில் பேசிய இவர் அமைப்பு சாரா தொழிலாளர் அனைத்து பிரிவினருக்கும் குறைந்த பட்ச கூலி நிர்ணயிக்கப்பட்டதாகக் கூறினார். ஆனால் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலியே இவர் அரசு நிர்ணயிக்கவில்லை. அது பற்றி திமுக துப்புரவுத் தொழிற்சங்கம் குறைந்த பட்ச கூலி வழங்க வேண்டி முதல்வருக்கு மனு அளித்ததுடன், சட்டமன்றம் எதிரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தி வலியுறுத்தியது.



தொடர்ந்து துணை நிலை ஆளுநரை சங்கப் பிரதிநிதிகள் சந்திக்க நேரம் கேட்டபோது, ஆளுநர் மறுத்துவிட்டார். பின்பு சங்கத்தின் சார்பில் டெல்லியில் உள்ள சஃபாய் கரம்சாரியின் தேசிய தலைவரை தொடர்பு கொண்டு பிறகு குறைந்தபட்ச கூலியை நிர்ணயித்து வழங்க மாவட்ட ஆட்சியர், உள்ளாட்சித் துறை இயக்குநர், தொழிலாளர் ஆணையர் ஆகியோருக்கு அறிவுறுத்தி கடிதம் அனுப்பினார். அதனைத் தொடர்ந்து சங்கப் பிரதிநிதிகள் மாவட்ட ஆட்சியர், இயக்குநர், ஆணையர் ஆகியோரை பலமுறை நேரில் சந்தித்து வலியுறுத்தியதின் விளைவாக தொழிலாளர் ஆணையர் கூட்டிய கூட்டத்தில் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் சென்ற மே மாதம் உள்ளாட்சித் துறை இயக்குநர் அலுவலகம் ரூ. 424 வழங்க அரசாணையை வெளியிட்டு ஜூன் முதல் செயல்பாட்டுக்கு வந்தது. இது திமுக சார்பு தொழிற்சங்கத்தின் ஓராண்டு போராட்டமே தவிர ரங்கசாமிக்கு இதில் எள்ளளவும் பங்கில்லை.

முதல்வர் ரங்கசாமி துப்புரவுத் தொழிலாளர்களுக்கு ஏதாவது செய்ய நினைத்தால் தமிழகத்தில் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வராக இருந்தபொழுது நிறைவேற்றப்பட்ட காலை உணவுத் திட்டத்தை நிறைவேற்றலாம். துப்புரவுத் தொழிலாளர் சங்கம் முன்னமே முதல்வர் ரங்கசாமி அவர்களுக்கு கொடுத்த கோரிக்கைகளான இலவச பேருந்து கட்டணம், இன்சூரன்ஸ் திட்டம், மாற்றுத் தொழிலுக்கு கடனுதவித் திட்டம் போன்றவைகளை நிறைவேற்றலாமே தவிர எங்கள் சங்கம் வென்றெடுத்த சாதனையை இவர் சொந்தம் கொண்டாடுவது அரசியல் உள்நோக்கம் கொண்டதாகவே உள்ளது.

இவ்வாறு பேசினார்.



மதுராந்தகம் தொகுதி இடைத் தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமையில், குன்னவாக்கம் பகுதியில் மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் எம்.சரவணன், பாக முகவர் விஜயகுமார், கிளை செயலாளர் சுதேஷ் ஆகியோர் முன்னிலை யில் கழக துணை அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டு திண்ணைப் பிரச்சாரம் மேற்கொண்டார்.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து, சென்னை மேற்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட வேடந்தாங்கல் ஊராட்சி, விநாயகநல்லூர் கிராமம், பாகம் எண்.42 மற்றும் கருக்கிலி ஊராட்சி பாகம் எண்.5, சித்தாமூர் கிராமம் பாகம் எண்.6ல் வசிக்கும் சுமார் 500 குடும்பங்களை வீடு வீடாக நேரில் சந்தித்து துண்டு பிரசுரம் வழங்கி சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் வாக்குகள் சேகரித்தனர். இந்நிகழ்வின் போது சென்னை மேற்கு மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர், வி.எஸ்.கலை, ஆ.சங்கீதா, ஆயிரம்விளக்கு பகுதி செயலாளர்கள் மா.பா.அன்புதுரை, வினோத் வேலாயுதம், பகுதி கழக நிர்வாகிகள், சேப்பாக்கம் பகுதி 114அ வட்டக் கழக செயலாளர் ஏ.தமீம் அன்சாரி, அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் உள்ளூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர். அப்போது மாற்றுக் கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.



வையாவூர் ஊராட்சியில் முசிவாக்கம் கிளை பாகம் 34ல் 100-நாள்-வேலை பணியில் ஈடுபட்டுகொண்டிருந்த மகளிர் மற்றும் பகுதி வாக்காளரிடம் சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எம்.வி.. பிரபாகரராஜா தலைமையில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கா.வீ.தியாகராஜன் முன்னிலையில் கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களுக்கு வீடுவீடாக சென்று வாக்கு சேகரித்தனர். உடன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பெருங்குடி ம.ஸ்ரீகாந்த், சதீஷ், பொன்மனசெல்வன் , இளம் பேச்சாளர் சந்தோஷ் ஜெய்194 (அ) வட்ட துணை அமைப்பாளர் ச.சஞ்சய் , 194வட்டம் 393 பாக அமைப்பாளர் உ.ரித்தீஷ், முசிவாக்கம் கிளை இளைஞரணி மகேந்திரன், நித்தீஷ் மற்றும் இளைஞரணி தோழர்கள் உள்ளனர்.

# செய்யறிவு உலகில் செம்மொழித் தமிழ் !

## 'கணையாழி' தலையங்கம்!

செ

ய்யறிவு!
மனித குலத்திற்கு
மற்றுமொரு புது நெருப்பு!

இந்த நூற்றாண்டிற்குக் கிடைத்த
இன்னொரு மின்சாரம்!

முன்னாள் முதல்வர் சொல்வதைப் போல
உலகை ஆட்கொள்ளப் போகிறது இணையம்!

காலத்தின் தேவையைக் கண்டறிந்த கலைஞர்
99ஆம் ஆண்டிலே
தமிழ் இணைய மாநாட்டைத்
தமிழ்நாட்டில் நடத்தினார்.

தமிழ் இணையக் கல்விக் கழகம்,
விசைப்பலகை 99,
ஒருங்குறியில் (யூனிகோடில்) தமிழ்...
செம்மொழி மாநாட்டில்
தமிழ் இணைய மாநாடு என்று
முன்னத்தி ஏர் பிடித்தவர் கலைஞர்!

அடுத்ததாக, இணையத்தில் தமிழின்
இடத்தை உறுதி செய்தது
முன்னாள் முதல்வர் 2024இல்
நடத்திய பன்னாட்டுத் தமிழ்க் கணினி மாநாடு!

இப்போது,
"செய்யறிவு உலகில்
செம்மொழித் தமிழும் தமிழரும்"!
கனடாடொராண்டோவில்
அக்டோபர் 15முதல் 18வரை
உலகத் தமிழ் ஆய்வு மாநாடு!

தமிழ் மொழி
தொடர்புக் கருவி மட்டுமில்லை;
ஒரு இனத்தின் வாழ்வகம்!
அறிவுக் களஞ்சியம்!
தலைமுறைகள் கைமாற்றும்
பண்பாட்டு மரபு.
காலத்தின் தேவைக்கு ஏற்பப்
புதுப்பித்துக்கொள்ளாத மொழி
எதிர்காலத்தை இழக்கும்!

இன்றைய உலகம்
செயற்கை நுண்ணறிவு எனும்
புதிய அறிவுப் புரட்சியின்
விளிம்பில் நிற்கிறது.
மனிதர்களைப் போல பேசிய கருவிகள்
இப்போது
மனிதர்களோடு பேசுகின்றன!
உரையாடுகின்றன!

மனிதர்களைவிட விரைவாகக்
கவிதை, கட்டுரை, கதைகளைத் தருகின்றன.
ஓவியங்கள் வரைகின்றன!
பாடுகின்றன!
இசையமைக்கின்றன!

கேள்விக்கு உள்ளாகியிருப்பது
மனிதர்களின் இருப்பு மட்டுமில்லை;
கடவுள்களின் இருப்பும் கூட!

இந்தப் புதிய உலகில்
எங்கே நிற்கிறது தமிழ்?
எவ்வாறு நிற்க வேண்டும் தமிழர்?
விடை தேடும் களமாகக்
கனடா உலகத் தமிழ் மாநாடு!

"செய்யறிவு உலகில்
செம்மொழித் தமிழும் தமிழரும்'
காலத்தின் குரல்!
காதல் மொழியாக,
பக்தி மொழியாக,
ஆட்சிமொழியாக,
வணிக மொழியாக மட்டும்
இனி இருக்காமல்
தமிழ்
தொழில்நுட்ப மொழியாக வேண்டும்!
அதற்குச்
செய்யறிவுக்குத் தமிழறிவைச்
சேர்க்க வேண்டும்!
அதற்கு முதல் கட்டமாகச்
செய்யறிவைச் சேர்க்க வேண்டும்
தமிழர்களுக்கு!
அது செய்யறிவை உருவாக்கும்




தமிழறிவாக வேண்டும்.
தமிழ்
சுவடி, அச்சு, கணினியில் வந்து,
மின்னுலகில் நுழைந்து,
காட்சி உலகில் விரிந்தது!
இப்போது இணையத்தில் வந்து
எல்லைகளை உடைக்கிறது!

மேலும்
தயாராகிக்கொண்டிருக்கிறது
தமிழ்
காலத்தின் தேவைக்கு!
இப்போது தமிழ் உலக மொழி!!

வாழும் தலைமுறைக்கும்
வரும் தலைமுறைகளுக்கும்
பாலமாக இருக்கிறது செய்யறிவு!

பன்மொழிச் சூழலில்
திசைகளின் திகைப்பில்
இன்னும்
ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பும்
தமிழ்ப் பயிர் வளரக்
கனடா மாநாடு!

இது
உலகத் தமிழுக்கான
ஓர் அறிவுப் பாலம்!
தமிழின் பெருமை
கடந்த காலத்தில்!
தமிழின் எதிர்காலம்
நமது கைகளில்!
இன்றைய பெருமை,
"தமிழ்
உலகின் தொன்மையான செம்மொழி".
கூடுதலாக வேண்டும்
"தமிழ்
உலகின் நவீன அறிவு மொழி!"
செம்மொழி என்ற பெருமை
கலைஞர் காலத்தில் கிடைத்தது!
அவர் எடுத்த
முயற்சிகளின் தொடர்ச்சியாக,
செய்யறிவு மொழி என்ற பெருமையை
அடைய,
செய்யறிவுக்குத் தமிழறிவைச்
சேர்க்கக் கூடுகிறது
கனடா மாநாடு!

தமிழ்
கடந்த காலத்தின்
நினைவகம் மட்டுமில்லை
அது
எதிர்கால அறிவுக்குத்
திறவுகோலாகட்டும்!

ஆம்!
செய்யறிவோடு சேர்ந்து
மனித குலத்திற்குத்
தமிழ்
மற்றுமொரு புது நெருப்பாகட்டும்!



**-நன்றி**
**'கணையாழி'**
**அக்டோபர் - 2026**

மு.ரா.